When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சடர் 5: பிரமோதூத ஆனி 25 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 15 (09-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 136

# கிழக்கின் பல பகுதிகள் இன்னும் புலிகளிடமே!

## நேரடியாகச் சென்று பார்த்த வெளிநாட்டுச் செய்தியாளர் தகவல்

பாரிஸ், ஜூலை 9

கிழக்கு மாகாணத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாக ஸ்ரீலங்கா அரசு திரும்பத் திரும்பக் கூறிய போதும், கிழக்கின் பல பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தான் இன்னும் இருக்கின்றன.

கிழக்கு மாகாணத்துக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளைக் கண்டறிந்த ஏ. எப். பி. செய்தியாளர் இந்தத் தகவலை நேற்று வெளியிட்டார்.

அவர் தமது செய்தி விமர்சனத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது;-

மட்டக்களப்பு நகரில் விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் எவ்வித பயமுமின்றித் தாராளமாக நடமாடி வருகின்றனர்.

கிராமத்து மக்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கின்றன.

### களுதாவளையில் சந்திப்பு

செய்தியாளர்கள் களுதாவளைக் கிராமத்திற்குச் சென்று புலிகளைப் பார்க்க வேண்டும் என்று கூறியநேரத்தில்15போராளிகள் ஏ. கே. 47 ரக துப்பாக்கிகளுடன் வந்து அவர்களுடன் சுதந்திரமாக உரையாடினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்கரைப் பகுதிகளில் இராணுவச் சிப்பாய்களைப் பார்க்கவே முடியாது உள்ளது என்றும் -

புலிகளின் நடமாட்டத்தை வெளிப்படையாகவே காணலாம் என்றும் இப்பகுதியில் உள்ள புலிகளின் தளபதி சுதர்ஸன் கூறினார்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் மக்கள் கூட்டமாக நின்றால் விமானங்கள் குண்டு வீசலாம் என்ற அச்சத்தால் மக்கள் அடிக்கடி வானத்தைப் பார்த்தவண்ணம் உள்ளனர்.

மட்டக்களப்பு நகர் இராணுவத்தின் கட்டுப்பாட்டில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூர் தபால் சேவை; உடன் ஆரம்பிக்கப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

உள்ளூர் தபால் சேவை மற்றும் விநியோக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி சகல தபால் அதிபர்களையும், உப தபால் அதிபர்களையும் யாழ்.பிராந்திய தபால் அத்தியட்சகர் கேட்டிருக்கிறார்.

விநியோக வசதிகளைக் கொண்ட சகல தபால் அதிபர்களும், உப தபால் அதிபர்களும் உள்ளூர் தபால் பெட்டிகளில் இருக்கும் கடிதங்களைச் சேகரித்து விநியோகிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அவர் கேட்டிருக்கிறார்.

மாவட்டத்துக்குள் விநியோகிக்கப்படவேண்டிய கடிதங்கள் தத்தம் பகுதிகளில் இருந்தால் தபால் அதிபர்கள் அவற்றை தபால் பொதி ஒன்றில் கட்டி, யாழ். பிரதேச தபால் தரம் பிரிக்கும் பகுதிக்கு [ஆர். எம். எஸ்.ஸி.] முகவரியிட்டு, தமது நிலையத்துக்கு அடுத்ததாக உள்ள மற்றைய தபால்நிலையங்கள் ஊடாக, அஞ்சல் முறையில் அனுப்பிவைக்கும்படியும் அவர் கேட்டுள்ளார். [உ]

## சகல மினிபஸ் சேவைகளும் முத்திரைச் சந்தியிலிருந்து

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ் - குடாநாட்டுக்கான சகல மினிபஸ் சேவைகளும், இன்று முதல் நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள தற்காலிக பஸ் நிலையத்தில் இருந்தே நடைபெறும்.

நேற்று யாழ். மாநகரசபையில் நடைபெற்ற வடபிராந்திய மினிபஸ் போக்குவரத்து சங்கக்கூட்டத்தில் இந்தமுடிவு எடுக்கப்பட்டது.

யாழ். பிரதான பஸ் நிலையம் இயங்க முடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து ஓட்டுமடம், தட்டாதெரு, மனோகரா சந்தி, ஆரியகுளம் சந்தி, முத்திரைச்சந்தி ஆகிய இடங்களில் தற்காலிகமாக பஸ் நிலையங்கள் இயங்கிவந்தன.

இன்று முதல் முத்திரைச் சந்தியில் இருந்தே முழு பஸ் சேவைகளும் நடத்தப்படும். (இ-3-9)

## தென்பகுதி தீவிரவாதிகளை கண்ட இடத்தில் சுட உத்தரவு

வடக்கு - கிழக்குப் பகுதியில் யுத்தம் நடந்து வரும் இந்த நேரத்தில் தென்பகுதியில் ஏற்படும் கிளர்ச்சிகளை அடக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது.

தென்பகுதியில் கிளர்ச்சியில் ஈடுபடுபவர்களைக் கண்ட இடத்திலேயே சுடுவதற்கு தென்பகுதிப் பொலிஸாருக்கு அரசு அதிகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதி தவிர்ந்த ஏனைய சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது-- என்று தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### அகதிகளை ஏற்றி வந்த

## படகோட்டியின் காதை வெட்டி பதம்பார்த்த சிப்பாய்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 9

திருகோணமலையில் இருந்து அகதிகளை முல்லைத்தீவுக்கு ஏற்றிவந்த படகோட்டியின் காதை பதம்பார்த்தனர் ஸ்ரீலங்காச் சிப்பாய்கள்-

கடந்த 26 ஆம் திகதி திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி அகதிகள் வந்த படகை மறித்த கொக்கிளாய் இராணுவத்தினர் படகோட்டி உட்பட எட்டுப்பேரைக் கைதுசெய்தனர்.

படகோட்டி உட்பட அனைவரையும் சிப்பாய்கள் மிருகத்தனமாக இரும்புச் சட்டங்களால் தாக்கினராம். அது மட்டுமன்றி படகோட்டியின் காதையும்சிப்பாய்கள் வெட்டி எடுத்தனராம்.

தாக்குதலுக்கு இலக்கானவர்கள்கடந்தவியாழக்கிழமை விடுவிக்கப்பட்டு புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ-3)

முச்சந்தி முரளி



வானொலியும், தொலைக் காட்சியும் சொல்லுறதையும், காட்டிறதையும் எவ்வளவுக்கு நம்பலாம் எண்டு இனி யோசியுங்கோ...!

## புலிகளின் அலுவலகம் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9

வவுனியா செட்டிகுளத்தில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அலுவலகக் கட்டடத்தை இராணுவத்தினர் நேற்று முன்தினம் குண்டு வைத்துத் தகர்த்தனர். (உ-9)

## மாமாங்கத்தில் மக்கள் விசாரணையில்

கொழும்பு, ஜூலை 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் உப்போடை, மாமாங்கம் ஆகிய பகுதிகளில் வாழும் 14 வயதுமுதல் 50 வயது வரையானவர்கள் பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டு உப்போடை, மாமாங்கம் ஆகியபகுதிகளில் வீடு வீடாக தேடுதல்நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. (உ-எ)

## சாம்பல்தீவு படையினரிடம்

கொழும்பு, ஜூலை 9

திருகோணமலை மாவட்டத்தில் சாம்பல்தீவு, மூதூர் ஆகிய பகுதிகள் பாதுகாப்புப் படையினரின் வசம் வந்துள்ளன என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்துள்ளது. (உ-எ)

## பங்குத் தந்தை அகதியானார்

யாழ்ப்பாணம், ஜூலை 9

கிளிநொச்சி சென்.திரேசா தேவாலய பங்குத்தந்தை வண.இருதயதாஸ் அகதியாக உருத்திரபுரம் சிறுவர் இல்லத்தில் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-9-3)

# புலிகளுடன் பேச பிரேமா நிபந்தனை!

## சர்வதேசப் பிரதிநிதிகள் முன்னிலையில் மட்டுமே என்று நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 9

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா புதிய நிபந்தனை ஒன்றை விதித்துள்ளார்.

சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் முன்னிலையிலேயே இனிமேல் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று அவர் நேற்றுக் கருத்து வெளியிட்டார்.

புத்தளத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் பேசுகையில் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்குவதற்கு அரசாங்கம் சகல வித முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

கண்ணி வெடிகள் போன்ற தடைகள் காரணமாக இப் பொருள்களைக் கொண்டு செல்வது பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

உணவுப் பொருள்களைக் கொண்டு சென்ற ஆயுதப் படையினர் பல சந்தர்ப்பங்களில் மரணமடைந்தும் காயமடைந்தும் உள்ளனர்.

ஆகாயமார்க்கமாக உணவுப் பொதிகளைப் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இது போதுமானதல்ல.

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கப்பல் மூலம் அனுப்பப்படும் உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கும் விடுதலைப் புலிகள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# கோட்டைக்குள் காயமுற்றோரை இடம்மாற்ற புதிய நடைமுறை?

## அரச தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் காயமடைந்திருக்கும் 18 இராணுவச் சிப்பாய்களை அங்கிருந்து அகற்றுவதற்கு புதிய ஏற்பாடு ஒன்றை அரச தரப்பினர் முன்வைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் மூலம் இந்த ஏற்பாட்டைச் செயற்படுத்த அரச தரப்பில் முயற்சிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

யாழ். நகரப் பகுதியிலிருந்து கோட்டைக்குள் பிரவேசிப்பதற்கான பாதை சேதமுற்றிருப்பதால் செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் வாகனங்களில் பாதை மார்க்கமாக கோட்டைக்குள் சென்று காயமுற்றிருப்போரை பொறுப்பேற்க முடியாதிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம், இலங்கை விமானப்படை ஹெலிக்கொப்டர் ஒன்று ஆயுதங்களோ மற்றைய பொருள்களோ ஏதுமின்றி, யாழ். நகரில் உள்ள பொது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3 முக்கிய விடயங்கள் குறித்து சில தினங்களில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 9

★ யாழ். போதனா ஆஸ்பத்திரியை மீண்டும் திறப்பது.

★ கோட்டையில் உள்ள காயமுற்ற சிப்பாய்களை அங்கிருந்து அகற்றுவது.

★ தரைமார்க்கமாக உணவு, மருந்து, எரிபொருள் என்பவற்றை வடக்கிற்கு எடுத்து வருவது.

— இந்த மூன்று முக்கிய விடயங்கள் சம்பந்தமான முடிவுகள் இரண்டொரு தினத்தில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் இலங்கை அரசுடன் இவை சம்பந்தமாக பேச்சு நடத்திவிட்டு இன்று வடக்கே வர உள்ளதாகவும் அதனை அடுத்து சில தினங்களில் இவைபற்றிய முக்கிய முடிவுகள் வெளியாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [உ-9]

## காடுகளில் தஞ்சம் புகுந்த அகதிகள் வெட்டிக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 9

திருகோணமலை மாவட்டம் கட்டைபறிச்சான், தோப்பூர், பள்ளிக்குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு அருகே உள்ள காடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்த தமிழர்களை கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் இராணுவத்தினர் சுட்டும், வெட்டியும் கொலை செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகளை அடுத்து காடுகளுக்குள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த அப்பாவித் தமிழ் மக்களே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்தோர் எண்ணிக்கை மற்றும் விபரங்கள் கிடைக்கவில்லை.

இதேவேளை—

பட்டித்திடல், கட்டைபறிச்சான், மூதூர், பள்ளிக்குடியிருப்பு, சேனையூர் ஆகிய பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக வெளியேறியிருப்பதாகத் தெரிய வருகிறது. (உ-9)

## பூநகரியிலும் அகதிகள்

பூநகரி, ஜூலை 9

நிலாவெளியைச் சேர்ந்த சுமார் 100 பேர் அங்கிருந்து நடந்து வந்து பூநகரியில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

கடந்த மாதம் 27ஆம் திகதி நிலாவெளியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து உடுத்த உடையுடன் மட்டுமே புறப்பட்ட இவர்கள் முல்லைத்தீவு வழியாக நடந்து, சென்ற சனிக்கிழமை 7 ஆம் திகதி இங்கு வந்து சேர்ந்தனர். பூநகரியில் உள்ள தேவாலயத்தில் இவர்கள் தங்கியிருந்தார்கள். (அ)

### அரசின் நிவாரணம் போதாது:

# தொண்டர் நிறுவனங்களின் உதவி கோருகிறார் முல்லை. அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஜூலை 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள சுமார் 7 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் கேட்டிருக்கிறார்.

ஏழாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 30 ஆயிரம் பொதுமக்கள் முல்லைத்தீவில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு அரசினால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் போதாது என்றும் —

அங்குள்ள அகதி முகாம்களில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் —

மருத்துவ வசதி இன்றி பலர் பாதிப்படைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து நிலைமையை விளக்கத் தாம் முயற்சித்து வருவதாகவும் —

அப்படிச் சந்திக்க முடியாமற் போனவர்களை இன்று திங்கட்கிழமை காலை தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள்விடுத்தார். அரசாங்க அதிபர் திரு. பொன்னம்பலம் இராச பாதை இல்லத்தில் தங்கி நிற்கிறார். (அ.10)

### சுப நேரம்

09-7-90

திங்கட்கிழமை ஆனி 25

சுபநேரம்!

11-58— 01-28

இராகுகாலம்

07-28—08-58

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தாதி தேவை

நேரில் தொடர்பு கொள்ளவும், Dr. P. சொர்ணலிங்கம், மாவடி மூளாய் றோட்' வட்டுக்கோட்டை. தொடர்பு நேரம்: காலை 7 மணியில் இருந்து 11 மணிவரை மாலை 3 மணியில் இருந்து 6 மணி வரை. (13580)

### விற்பனைக்கு

L. M. L. Vespa நியாய விலையில் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: நிரஜா அச்சகம், K K S வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். (13591)

### தவறிவிட்டது

642123092V, 677410361V, தமியாம்பிள்ளை விமலதாசன், மரியதாஸ்மேரி யுஸ்ரீன் அம்மா ஆகிய இரு அடையாள அட்டைகள் தவறிவிட்டன. இடைத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (13651)

## உற்சவம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 9 எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற இருந்த அரியாலை, பிரப்பன்குளம் மகாமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## புத்தளத்திலும் படையினர் சோதனை

கொழும்பு, ஜூலை 9 புத்தளம் நகர வீடுகளிலும் இலங்கை இராணுவத்தினர் சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

தேடுதலின் போது வட பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் விசாரணைக்காக ஆயுதப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது. (இ-எ)

## சுன்னாகம் மக்கள்வங்கி

மயிலணி, ஜூலை 9 மக்கள் வங்கி சுன்னாகம் கிளை வழமை போலத் தனது முழுமையான சேவையை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது.

பதற்றமான சூழ்நிலை காரணமாக வங்கி வேலை நேரம் காலை 9 மணி முதல் காலை 11 மணிவரையுமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (இ 89)

## உடுபுடைவை சேகரிப்பு

கொழும்புத்துறை, ஜூலை 9 வெளிமாவட்டங்களில் இருந்து கொழும்புத்துறை வந்துள்ள அகதிகளுக்கு உதவுவதற்காக கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் உள்ள மாணவிகள், பெண்கள் உடுபுடைவைகளை வீடுகள் தோறும் சென்று சேகரித்து வருகின்றனர். (இ-30)

## பூநகரியில்

பூநகரி ஜூலை9 பூநகரி, கௌதாரி முனை கிராமசேவையாளர் பிரிவில் உள்ள சுமார் 350 அகதிக் குடும்பங்கள் நிவாரணம் பெறுவதற்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே பாலசுப்பிரமணியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (இ)

## 55 வயதுக்கு பின்பே ஓய்வூதியம்

கொழும்பு, ஜூலை 9 55வயதை அடையும் முன்னர் ஓய்வு பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது என்று பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. சில அரச ஊழியர்கள் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து 55 வயதுக்கு முன்னரே ஓய்வு பெற முயற்சித்து வருவதைத் தொடர்ந்தே இச் சுற்றறிக்கை விடப்பட்டுள்ளது. (இ-எ)

---

## OFFICE EQUIPMENT LTD.

### இடமாற்றம்

140, நாவலர் வீதியில் இயங்கிய OFFICE EQUIPMENT LTD. ஸ்தாபனம் தற்காலிகமாகத் தனது அலுவலகத்தை இடமாற்றம் செய்துள்ளது.

பின்வரும் இடங்களில் தொடர்பு கொள்ளலாம்.

1. நம். 537, சிவன் கோவில் வீதி, [Central Nursing Home முன்பாக] திருநெல்வேலி தெற்கு
2. உருக்குத் தளபாட உற்பத்தி தொழிற்சாலை வேம்பன் றோட், (பெற்றோல் செட் முன்பாக) உரும்பராய்.

அலுவலக நேரம்:
காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 1.00 மணி வரை

கிளை முகாமையாளர்,
**Office Equipment Ltd.**

[சி-4795]

---

## இடமாற்றம்

இல. 43. 48 நவீன சந்தையில் இயங்கி வந்த அங்கலின் ரெக்ஸ்ரைல் தற்காலிகமாக 3ம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியன்காட்டிற்கு (சந்தை அருகில்) மாற்றப்பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.


★ பிடவைகள் ★ பிளாஸ்டிக்
★ பொலித்தீன் ★ சொப்பிங் பாக்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

[13593]

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### திரு. செ. திருநாவுக்கரசு

(சமாதான நீதவான், முன்னைநாள் பருத்தித்துறை சிங்கர் கொம்பனி முகாமையாளர், முன்னையநாள் உடுப்பிட்டி கிராமசபை உப தலைவர்)

அன்னை மடியில்: 15 - 07 - 1920
ஆண்டவன் அடியில்: 12 - 07 - 1987

திதி: 09 - 07 - 1990

ஆண்டுகள் தானே நகர்கின்றன - உங்கள்
நினைவு உள்ளத்தை விட்டு நகரவில்லையே
உருவம் தானே மறைந்தது - உங்களை
இழந்த வடு இன்னும் மறையவில்லையே
இழந்தது உங்களை மட்டுமா? - இல்லை
மகிழ்ச்சி, தலைமைத்துவத்தையும் அல்லவா
இழந்தோம்.

ஆண்டுகள் நகரட்டும், உருவம் மறையட்டும் எம் உள்ளம் இருக்கிறதே இதில் உங்கள் நினைவு நீங்காதிருக்கின்றது. நினைக்கும் தோறும் கண்ணீருடன் வாழும் எமது உயிர் இருக்கும் மட்டும் உங்களை இழந்த வடு மாறாது ஆறாது.

மனைவி, மக்கள், சகோதரர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சரணவாய் வடக்கு,
சரவெட்டி. (13598)

---

## அராலி பம்பாய் வெங்காயம்

## சங்கானை ப.நோ. கூ. ச. மூலம்

வட்டுக்கோட்டை, ஜூலை 9 அராலியில் உற்பத்தி செய்யப்படும் பம்பாய் வெங்காயம் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. நா. குசராசா, சங்கானை ப. நோ. கூ. சங்க நுகர்ச்சி முகாமையாளர் திரு. பெ.கனகரத்தினம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். (இ-161)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்

### பொன்னையா வசந்தகுமார்

மலர்வு:- 13 03-1968
உதிர்வு: 20-06-1989

பாரில் எனைப்பதைக்கவிட்டு
பரமனிடம் நீ சென்று இன்று
ஓராண்டு சென்றதடா என்
உள்ளம் உனைத் தேடுதடா
ஒருழிகாலம்தான் ஓடிமறைந்தாலும்
நீராழிபெருகுதடா நெஞ்சில் உன் நினைவு
வாராயோ நீயொருகால் வருந்துமெனை ஆற்ற
சீராளா வசந்தா செப்பிடடா ஒருவார்த்தை.

இவ்வண்ணம்
உன்பிரிவால் வாடும்:
செ. செல்வராசா.

சிறி றெக்கோடிங் ஸ்ரூடியோ,
நவீன சந்தை இல: 01
கண்டிவீதி, கொடிகாமம். (13575)

---

## ஓராண்டு நிறைவின் நினைவு நாள்



செல்வி

### றஞ்ஜிதநீலா கணபதிப்பிள்ளை

தரை மடியில்: 19 - 09 - 1957
இறை அடியில்: 20 - 07 - 1989

செய்வத் திருமகளே எங்கள் வாழ்வு
உய்யவென வந்தவளே அன்பு நீலா
ஏனம்மா எமைவிட்டு நீ சென்றாய்
பாரம்மா நாம்படும் மாதுயரை
யாரம்மா உனையெடுக்கத் தூதுவிட்டார்
நீ அம்மா போனதனால் எங்கள் ஈரல்
எரிபட்டுப் புண்பட்டுத் துண்டு துண்டாய்த்
தறிபட்டு உயிர்ப்பலி எடுக்குதம்மா
எங்களது பந்தமாகப் பாசமாக
திங்களது குளிரொளியாய்ச் செல்லமாக
வாழ்ந்தவளே எங்களது நெஞ்சினிலே
ஆழ்ந்தவளே றஞ்ஜிதமே ஆசை நீலா
ஐயோ நாம் எப்படித்தான் ஆறிடுவோம்
ஐயோ நாம் ஆறவழி இல்லையம்மா
ஒரு நிமிடம் தானும் உன்னைக் காணாவிடில்
பல வருடம் போனது போல் நாம் தவிப்போம்
எங்கு நாம் சென்றாலும் தாமதித்துத்
தங்காது உனைக்காண ஓடியோடி
வருவோமே வந்ததும் நீ கருணைமுகம்
தரும் போது எங்கள் முகம் பொலிந்து நிற்கும்
ஆனால் இன்று..? செல்வமே நீயில்லாது
பாழாகிப் போனதம்மா எங்கள் வாழ்வு
அம்மா தாயே உனக்கு ஒரு வேண்டுகோள்
எம்மோடு என்றைக்கும் நீ இருக்க வேண்டும்

தந்தை, தாய், சகோதரங்கள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
பேரன்மார், பேத்திமார்.

47, சேர். பொன் இராமநாதன் றோட்,
[illegible] [13498]

---

## இடமாற்றம்

### ஸ்ரீலங்கா புத்தகசாலை

234, K. K. S. வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் சூழ்நிலை காரணமாக இப்போது

**14, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

என்ற முகவரியில் தற்காலிகமாக நடைபெறுகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

நிர்வாகி.
(சி-4850)

---

## தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### கலந்துரையாடல்

காலம்: 12 - 07 - 1990ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணி
இடம்: தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மண்டபம்
தலைவர். திரு. சி. சிவமகாராசா, தலைவர், தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்

### கலந்துரையாடல் விடயம்

1. சங்கக் கிளைகளின் பாதுகாப்பு
2. உணவுப் பற்றாக்குறை, பங்கீட்டு முறை, விநியோக ஒழுங்கு முறை
3. அத்தியாவசிய உணவுப்பொருள் கொள்வனவுக்கு உதவுதல்.
4. தடைகள், வசதிக் குறைவுகள் மத்தியிலும் உணவு உற்பத்தி செய்தல், ஊக்குவித்தல், உதவுதல்.


தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழு, நெறியாளர்குழு, மகளிர்குழு உறுப்பினர்கள், சங்கப்பணியாளர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சி. முருகையா,
செயலாளர்,
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்,

தெல்லிப்பளை,
05 - 07 - 1990 [சி-4799]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



செல்வன்

### பொன்னையா வசந்தகுமார்

(சாவகச்சேரி இந்துகல்லூரி விஞ்ஞானபீட பழைய மாணவன்)

மண்ணகம்: 13 - 03 - 1968
விண்ணகம்: 20 - 06 - 1989

திதி: 09 — 07 — 1990

ஓராண்டு சென்றாலும் மாறாது உன் நினைவு
இனிய மலராய் எங்கள் குடும்பத்தில் நீ இருந்தாய்
கற்றதினால் ஆய பலன் என்னவென்று காணு முன்னே
விதியின் பலன் தான் விண்ணுலகு சென்றாயா
இன்றும் எம் கண்ணீர் ஓயவில்லை

உன் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகின்றோம்

உன் பிரிவால் வாடும்:
ஐயா, அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

கண்டாவளை. [13556]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உணவுப்போர்

தெற்கிலிருந்து உணவுப் பொருள்கள் வரும் என்று இனி எதிர்பார்க்க முடியாது. வடக்கே அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்புவதாக, அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க அதிகாரிகள் வெளி உலகத்தை ஏமாற்றி வருகிறார்கள்.

எனவே தமிழர்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களைத் தாமே உற்பத்தி செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. வெறும் வார்த்தைகளால் மட்டுமன்றி செயலிலும் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் — கட்டாயத் தேவை — ஏற்பட்டிருக்கிறது.

இதுவரை காலமும் தமிழ்ப்பகுதிகளில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கூறிக் கொண்டிருந்தோமே அன்றி வெளியிலிருந்து உணவுப் பொருள்கள் வரச் சாப்பிட்டு விட்டு செயலில் இறங்க மறந்து விட்டோம். கஷ்டம் வருமுன் திட்டமிட்டுச் செயற்பட்டு அதிலிருந்து தப்பிக் கொள்ளத் தவறிவிட்டோம். இப்போது கஷ்டம் வந்திருக்கிறது. இவ்வேளையிலாவது செயற்பட வேண்டும், வெறும் வாய்ப்பேச்சோடு இனியும் நின்றுவிடுவோமானால் வாயையும், வயிற்றையும் நிரப்ப முடியாமல் பட்டினியால் மடியவேண்டியதுதான்.

எனவே விவசாயம் செய்யக்கூடிய ஒவ்வொரு அங்குல நிலத்திலும் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்படுதல் அவசியம். தோட்டக் காணியில் மட்டுமல்ல, வீட்டுக்காணியிலும், வீணாகக் கிடக்கும் காணியிலும். பசுமை நிறையவேண்டும். கிராமத்தில் தனியவன்றி நகரத்திலும் உணவு உற்பத்தி தொடங்கப்பட வேண்டும். வீடுகளில் பூந்தோட்டங்களுக்குப் பதில் காய்கறித் தோட்டங்கள் இடம் பிடித்தலே பொருத்தம்.

எல்லோரும் தமக்கு இயன்றளவில் உணவு உற்பத்தியில் இறங்க வேண்டும். குறுகிய காலப்பயிர்களை, தங்கள் பகுதி மண்ணுக்கு உகந்த பயிர்களை இனங்கண்டு உற்பத்தி செய்ய வேண்டும். புதிதாக உருவாக்கப்பட்டுள்ள உற்பத்திக் குழுக்களிடம் ஆலோசனைகளைப் பெற்று அதிக தண்ணீர்ச் செலவில்லாத பயிர்களை நாட்டவேண்டும்.

உணவு உற்பத்தியும் ஒரு வகைப் போராட்டமே. அந்தப் போராட்டத்தில் வெல்ல வேண்டுமானால் தெற்கிலிருந்து உணவு வகைகள் வராமலே தமிழர்கள் உண்டு உயிர் வாழ்வார்கள் என்பது நிலைநாட்டப்படுவது அவசியம். பொருளாதாரத் தடை விதித்து உணவுப் பொருள்களை அனுப்பி வைக்காத அரசுக்கு, தமது கையை நம்பி வாழும் பலம் தமிழர்களுக்கு உண்டு என்று நிரூபித்துக் காட்டுவது அவசியம். அப்படிச் செய்து இலங்கை அரசுக்கும் உலகுக்கும் காட்டவேண்டும் என்ற மன ஓர்மம் ஒவ்வொரு தமிழரிடமும் விளைவது அவசியம். அந்த உணர்வும் ஓர்மமும் வந்து விட்டால் ஒவ்வொருவரும் நிச்சயம் செயலில் இறங்குவார்கள்.

கஷ்டத்தில் அதிர்ஷ்டமும் வருவது உண்டு. தெற்கிலிருந்து உணவுப் பொருள் வராத கஷ்டத்தில், உணவு உற்பத்தி தமிழ்ப் பகுதிகளில் தீவிரமடைந்தால் அதனையும் அப்படியே கொள்ளலாம் அல்லவா?

இது போராட்ட காலம். வெறும் அரசியல் - ஆயுதப் போராட்டக் காலம் மட்டுமல்ல. சமகாலத்தில் பல்வேறு வகைப்பட்ட போராட்டங்களும் தேவையான நேரம். அவற்றில் உணவு உற்பத்திப் போராட்டம் மிக மிக முதன்மையானது. ஏனைய எல்லாவற்றுக்கும் அடிப்படையானது. தீவிரமாகச் செயற்பட்டு பட்டினியைத் தோற்கடித்து வெற்றி கொள்ளப்பட வேண்டியது.

எங்கள் முந்தைய பரம்பரையினர் வேறு எவர் கையையோ, கப்பலையோ, ரயிலையோ, லொறியையோ எதிர்பார்க்காமல், தங்கள் உணவைத் தாமே உற்பத்தி செய்து உண்டு வாழ்ந்தவர்கள் என்பதை ஒரு நம்பிக்கைக் கோடாகக் கொண்டு உணவு உற்பத்திப் போராட்டத்தில் வெற்றி காண்போமாக.

---

# அகதிகளுக்கு சீனி, மாவுக்கு பதில் உள்ளூர் உற்பத்தி பொருள்கள்

## அரிசியும் முடிவடையும் தறுவாயில்

யாழ்ப்பாணம், ஜூலை 9

இடம் பெயர்ந்த அகதிகளுக்கு சீனி, மாவுக்கு பதிலாக உள்ளூர் உற்பத்திப் பொருள்களே தற்போது வழங்கப்படுகின்றன. சீனி, மாவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடே இதற்குக் காரணம் ஆகும்.

இடம் பெயர்ந்தவர்களாக கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டவர்களுக்கு ஆரம்பத்தில் 1 கிலோ சீனி, 2 கிலோ மா என்ற அடிப்படையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது.

சீனி, மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து இவற்றின் அளவுகள் குறைத்து வழங்கப்பட்டன.

தற்பொழுது சீனிக்கும் மாவுக்கும் முற்றாக தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. சீனிக்கு பதிலாக பனம் கட்டியும், மாவுக்கு பதிலாக குரக்கன் மா, அரிசி மா, அல்லது ஒடியல் மா போன்ற பொருள்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது கையிருப்பில் உள்ள அரிசியும் முடிவடைந்து வருவதால் அரிசிக்குப் பதிலாக நெல் வழங்க வேண்டிய நிலை ஏற்படும் என பல நோக்குக் கூட்டுறவுச் சங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

## கடை ஒன்றில் 30 மூடை சீனி

குருநகர், ஜூலை 9

கடந்த சனிக்கிழமை காலை கொக்குவில் கடை ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தேடுதலில் முப்பது மூடை சீனி பிடிபட்டது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்திருந்த அறிவித்தல் ஒன்றில், அத்தியாவசிய உணவுப் பொருள்கள் பதுக்கி வைக்கப் படுவதும், விலை கூட்டி விற்கப்படுவதும் தண்டனைக்கு உரிய குற்றமாகும். (இ-51)

## மன்னார் கச்சேரியும் ஷெல்லால் சேதம்

மன்னார், ஜூலை 9

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகமும் (கச்சேரியும்) அரச அதிபரின் விடுதியும் ஷெல் தாக்குதல்களினால் சேதமடைந்துள்ளன.

அதனையடுத்து மன்னார் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இருந்த அனைத்து ஆவணங்களும் தாழ்வுப்பாடு கிராமத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

மன்னார் அரசஅதிபர் அலுவலகம் தற்காலிகமாக தாழ்வுப்பாடுபகுதியிலேயே இயங்கி வருவதாகவும், மன்னாரில் உள்ள கத்தோலிக்க மதகுருமார்களின் உதவியுடன் அரசாங்க அதிபர் அங்கு செயற்பட்டு வருவதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

கிளிநொச்சிக் கச்சேரியும் ஷெல் தாக்குதலினால் பாதிப்புற்றுப் பரந்தனுக்கு மாற்றப்பட்டுள்ளது தெரிந்ததே. (அ-10)

## அனைத்துக் கட்சிகள் குழுவில் ஈ.பி.ஆர்.எல்.எப். இடம் பெறாது

### பிரேமச்சந்திரன் எம்.பி தகவல்

கொழும்பு, ஜூலை 9

இலங்கை நிலைமை குறித்து சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு எடுத்துச் சொல்லவிருக்கும் அனைத்துக்கட்சி நாடாளுமன்றக் குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை என்று ஈ. பி. ஆர். எல். எப். இயக்கம் அறிவித்துவிட்டது.

இத்தகவலை ஈ. பி. ஆர். எல். எப். செயலதிபரும் எம்பியுமான திரு. சுரேஷ் பிரேமச்சந்திரன் குழுவின் தலைவரும் சபாநாயகருமான எம். எச். முஹம்மதுவிடம் நேரில் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்து விட்டார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் அப்பாவி மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதை சார்க் நாடுகளுக்குச் சென்றுதான் நியாயப்படுத்த விரும்பவில்லை என்று திரு. பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் திரு. பிராட்மன் வீரக்கூனையும் திரு. பிரேமச்சந்திரன் சந்தித்தார்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குஅரசியல் தீர்வு காணும் நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதப்படுத்த வேண்டும் என்று திரு. வீரக்கூனை திரு. பிரேமச்சந்திரன் கேட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## அப்பாவித் தமிழர்களை காப்பாற்ற முடியவில்லை

### சபையில் ரெலோ எம். பி

கொழும்பு, ஜூலை 9

தற்போதைய போரில் எங்களால் அப்பாவித் தமிழரைக் காப்பாற்ற முடியவில்லை. இரத்தக்கண்ணீர் வடிக்கிறோம். அரசின் ஒவ்வொரு நடவடிக்கையும் நிதானமாக அமைய வேண்டும். தற்போதைய போரில் அரசிற்கு ஆதரவு தெரிவிப்பதுடன் மாத்திரம் எமது கடமை முடிந்து விடவில்லை.

இந்த யுத்தத்தில் அநியாயமாகப் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் மக்களுக்கு உதவவேண்டியது எமது அதிமுக்கிய கடமையாகும்.

மாகாண சபைக் கலைப்புச் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் ரெலோ எம்.பி திரு. கருணாகரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:-

நாங்கள் விவாதித்துக் கொண்டிருக்கும் திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டபோது இருந்த சூழ்நிலை இப்போது இல்லை. முற்றிலும் மாறான சூழ்நிலையில் நாடு இருக்கிறது.

முழு நாட்டின் மீதும் தமிழ் பேசும் மக்களின் மீதும் விடுதலைப் புலிகளினால் திணிக்கப்பட்டிருக்கும் இந்த யுத்தத்தில் நாடு ஒன்று பட்டு இருக்கிறது. ஜனநாயக சக்திகள் ஓரணியில் உள்ளன.

எம்மத்தியில் உள்ள ஒருசில சந்தர்ப்பவாதிகள் மதில்மேல் இருக்கின்றார்கள். உரிய நேரத்தில் எம்முடன் இணைந்து கொள்வதற்காக அவர்கள் காத்து இருக்கின்றார்கள். அவர்களை இந்த நாடு அறியும்; தமிழ் பேசும் மக்களும் நன்கறிவார்கள்.

யுத்தம் வெடித்தவுடனேயே நாம் இந்த நிலைப்பாட்டை மேற்கொண்டோம். எமது நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி திட்டவட்டமான இந்த முடிவை மேற் கொண்டோம்.

இப்படி அவர் பேசினார், (இ-எ)

## இலங்கை வங்கி ஸ்ரான்லிவீதி கிளை

யாழ்ப்பாணம், ஜூலை 9

இதுவரை மட்டுப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு வந்த இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளை பொதுமக்களின் நன்மை கருதி இன்று திங்கள் முதல் காலை 9மணி தொடக்கம் 10 மணி வரை கொடுக்கல் வாங்கலுக்காக திறந்திருக்கும்.

## இடம் பெயர்ந்தோர் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

வெளி இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் வந்து தங்கியுள்ளவர்களுக்கு இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணமாக அரிசி, மா, சீனி முதலிய உலர் உணவுப் பொருள்களை புலோலி ப. நோ. கூ. சங்கம் மந்திகை, கற்கோவளம் ஆகிய இடங்களில் வழங்கி வருகின்றது. (இ)

## புலிகளுடன் பேச....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

மாகாணசபைச் சட்டத்தின் கீழ் முதலமைச்சரின் சிபாரிசின் பேரில் மாத்திரம் தான் மாகாணசபையைக் கலைக்க முடியும்.

ஈ. என். டி. எல்., எவ். ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய கட்சிகள் விடுதலைப் புலிகளை மிஞ்சும் நோக்கத்துடன் தனிநாடு பிரகடனம் செய்தனர்.

உண்மையில் இந்தப் பிரகடனத்தைச் செய்ததன் மூலம் முதலமைச்சர் தனது பதவியை தானே துறந்தார். இந்தச் சூழ் நிலையில் புதிதாகத் தேர்தலை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டது.

### அதிகாரங்களை திரும்பப் பெறமாட்டோம்

மாகாணசபைகள் சட்டத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை திரும்பப் பெறும் நோக்கம் அரசுக்கு இல்லை.

பொதுமக்களின் வாக்குப் பலத்தின் மூலம் மீண்டும் வடக்கு - கிழக்கு மாகாண சபையை அமைப்பதே அரசின் நோக்கமாகும்.

வடக்கு - கிழக்கு மக்கள் அச்சமோ பயமுறுத்தலோ இன்றி வாக்களிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகுதல் வேண்டும்.

வடக்கு - கிழக்கு மக்கள் தாம் விரும்பிய கட்சி ஒன்றை தேர்ந்தெடுக்கச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று கோரிய விடுதலைப் புலிகள் இப்போது என்ன கூறுகிறார்கள்?

இந்த யுத்தத்தைக் கைவிட்டு அவர்கள் தேர்தலில் போட்டியிட முன்வருவார்களா?

அல்லது சதாகாலமும் வடக்கு - கிழக்கு பகுதியில் உள்ள மக்களுக்குச் சொல்லொணாத் துயரத்தை விளைவிக்கும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடுவார்களா?

### புலிகளின் பதில் என்ன?

இந்தநாட்டு மக்களும் உலக நாடுகளில் உள்ள மக்களும் விடுதலைப் புலிகளின் பதில் என்ன என்பதை அறியக் காத்திருக்கிறார்கள்.

அவ்வப்போது செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கைகளைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே மீறியுள்ளது. ஆகவே சர்வதேச சமூகம் பங்குகொள்ளும் - இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய - ஏற்பாடு ஒன்றின் மூலம் மாத்திரமே விடுதலைப் புலிகளுடன் மீண்டும் பேச்சுக்களை நடத்தமுடியும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் எந்தவித ஆத்திரமூட்டலும் இன்றித் தாக்குதலை ஆரம்பித்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கம்தான் யுத்த நிறுத்தத்தை மீறியது.

எனவே அவர்கள்தான் முதலில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

### உயிர்ச் சேதத்தை தடுப்பதற்கு...

விடுதலைப் புலிகள் தமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தினால் மாத்திரமே வடக்கிலும், கிழக்கிலும் ஏற்படும் உயிர்ச் சேதத்தையும் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதத்தையும் தடுக்கமுடியும். விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்த காலத்திலேயே அரசு இரண்டு முக்கிய விஷயங்களைத் தெளிவுபடுத்தியது.

முதலாவதாக-

அவர்களால் முன் வைக்கப்படும் எந்த ஒரு கோரிக்கையும் இலங்கை அரசியல் யாப்புக் கட்டுப்பாட்டுக்குள் தான் நிறைவேற்றப்படும் என்பதாகும்.

இரண்டாவது-

பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போது அரசாங்கம் ஏனைய கட்சிகளையும் கலந்தாலோசிக்கும் என்பதாகும்.

-இப்படி திரு. பிரேமதாஸா மேலும் சொன்னார். (உ-எ)

## உடனடி உற்பத்திக்கு உகந்த பயிரினங்கள்

தமிழ்ப் பகுதிகளில் யுத்த நிலைமை தொடருகிறது. வெளி மாவட்டங்களில் இருந்து உணவுப் பொருள்கள் வருவது தடைப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் உணவு உற்பத்தியை உடனடியாகத் தீவிரப்படுத்த வேண்டிய அவசிய தேவை ஏற்பட்டுள்ளது.

உணவு உற்பத்தி என்று வெறுமனே வாயால் சொல்லிக் காரியம்ஆகப்போவதில்லை. அந்தந்தப்பகுதி மண்வளத்துக்கு ஏற்ப என்னென்ன வகையான குறுகிய காலம் பயிர்களைச் செய்து பலன்பெற முடியும் என்பது கண்டறியப்படவேண்டும்.

தமிழீழ ஆய்வு நிறுவனம் வார இறுதியில் நடத்திய கருத்தரங்கு ஒன்றின் மூலம் குடாநாட்டின் விவசாயப் போதனாசிரியர்கள் பிரிவுகள் தோறும் செய்கை பண்ணக்கூடிய பயிரினங்கள் இனங்காணப் பட்டுள்ளன.

வாசகர் நலன் கருதி அவை பற்றிய விவரத்தை இங்கு தொகுத்து தருகின்றோம்

### பயிர்கள்

உடனடியாக உற்பத்தி செய்வதற்கு இனங்காணப் பட்ட பயிர்கள்.

அ) குரக்கன், சாமை, தினை
ஆ) வற்றாளை, மரவள்ளி.
இ) பாசிப்பயறு, கௌப்பி

### பொருத்தமான பகுதிகள்

★ மேற்குறிப்பிட்ட பயிர்களை யாழ் மாவட்டத்தில் உற்பத்தி செய்யக்கூடிய பொருத்தமான விவசாய போதனாசிரியர் பிரதேசங்கள்.

| | |
|---|---|
| குரக்கன்:- | கீரிமலை, புத்தூர், சாவகச்சேரி, நல்லூர், தொல்புரம், உடுவில், புலோலி, கைதடி, உரும்பராய். |
| சாமை:- | கீரிமலை, உடுவில், புத்தூர், புலோலி, உரும்பராய் |
| தினை:- | கீரிமலை, உடுவில், புத்தூர், உரும்பராய் |
| வற்றாளை;- | சாவகச்சேரி, கைதடி. |
| மரவள்ளி:- | சாவகச்சேரி, நல்லூர், கீரிமலை, உடுவில், புத்தூர், கைதடி, உரும்பராய் |
| பாசிப்பயறு-: | சாவகச்சேரி, நல்லூர், தொல்புரம் கீரிமலை, உடுவில், புத்தூர், புலோலி, கைதடி, உரும்பராய். |
| கௌப்பி:- | சாவகச்சேரி, நல்லூர், உரும்பராய் கைதடி, புலோலி |

நீர்ப்பாசனத்திற்கு தேவையான எரிபொருள் மின்சாரம் ஆகியவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கிடைக்காமல் போகலாம் அல்லது பெரும் விலை அதிகரிப்பு ஏற்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பாரம்பரிய நீரிறைக்கும் முறைகளை மீண்டும் கையாள நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் அவசியம். குறிப்பாக துலா மூலம் நீர் இறைக்கும் முறையை கூட்டுறவு அடிப்படையில் பின்பற்றலாம்.

விவசாயம் செய்யக்கூடிய எல்லா விளை நிலங்களையும் பயிர் செய்கைக்கு உட்படுத்துதல் அத்தியாவசியமானது.

விளைநிலங்களாக இருந்தும் தற்பொழுது விவசாயம் செய்யப்படாமல் உள்ள உங்களது வெற்று நிலங்களை கிராமிய உற்பத்திக் குழுக்கள் பயிர் செய்கைக்கு உட்படுத்தி உணவு உற்பத்தியை பெருக்க உதவுங்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் கூடுமானவரை மரக்கறி, பழமரங்கள் மரவள்ளி ஆகியவற்றை உற்பத்தி செய்ய மக்கள் தாமாகவே முன் வரவேண்டும் அதற்கான ஆலோசனைகளை உற்பத்திக் குழுக்கள் வழங்கும்.

# நிலத்தின் கீழ் - அகழியே கூடுதல் பாதுகாப்பு; அதற்குள் செல்ல அடிக்கடி பயிற்சி பெறுங்கள்

**குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி? பகுதி IV**

[முன் தொடர்ச்சி]

மின்னலின் போது ஏற்படும் இடியானது ஒவ்வொன்றும் எமது தலையின் மீதே விழுந்து விடும் என்று எண்ணுவது எவ்வளவு முட்டாள்தனமோ அதைப்போன்றதே போடப்படும் குண்டுகளும் நேரடியாக எம்மீது விழுந்து வெடிக்கும் என எண்ணுவதுமாகும். எனவே குண்டு வீச்சுக்களிற்கு எதிரான வகையில் பிரத்தியேகமான அகழிகள் அமைப்பதற்கு இயலாதவர்கள் இதுவரை மேற்கூறியவாறோ அல்லது வேறு வகையிலான ஏதாவ

### தகவல் மேடை

தொரு பள்ளமோ, கிடங்கோ உங்கள் அருகில் காணப்படுமாயின் அவற்றினைக் குண்டு வீச்சிற்கெதிராகப் பயன்படுத்துவது சிறப்பானதாகும்.

நேரடியான தாக்குதலுக்கெதிரான ஒரு சில விசேஷ அமைப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

பொதுவாக இம்மாதிரியான அமைப்புக்கள் நிலத்தின் கீழ் அகழிகள் வடிவிலேயே அமைக்கப்படுகின்றன. ஏனெனில் நிலத்தின் மேல் அமைக்கப்படும் அமைப்புக்களாயின் பக்கவாடுகளும் கூட குண்டு வீச்சுத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்கும் முகமாகவே கட்டப்படவேண்டும். இதுமேலும் அதிகளவு பொருட்செலவை தரும் என்பதால் நிலங்கீழ் அமைப்புகளே விரும்பப்படுகின்றன.

இதன்போது பக்கவாடுகள் அனைத்தும் மண்ணினால் பாதுகாப்பாக சூழப்பட்டிருப்பதால் மேல் பகுதிக்கு மட்டும் தாக்குதலை எதிர்கொள்ளக் கூடிய வகையில் கூரை அமைக்கப்படுதலே போதுமானதாகும்.

### அகழிகள்

விசேட அமைப்புகளை விட மக்கள் அனைவரையும் அமைக்கக்கூடிய அகழிகள் இரு வகைப்படுகின்றன. திறந்த அகழிகள் மூடிய அகழிகள் என்பவையே அவையாகும். அகழிகளையே பேச்சு வழக்கில் பதுங்கு குழிகள் என்று சொல்கிறார்கள். இங்கு ஒப்பீட்டு ரீதியில் பார்க்குமிடத்து மூடிய அகழிகளானவை திறந்த அகழிகளைவிட அதிகளவு பாதுகாப்பைத் தரக்கூடியனவாகும். ஆனாலும் திறந்த அகழிகளில் உள்ள நன்மை யாதெனில், குறுகிய அவகாசத்தினுள் அதிகமானோர் அதனுள் உடனடியாக மறைந்து கொள்ளக் கூடியதாக இருப்பதேயாகும்.

### திறந்த அகழிகள்

இவ்வகை அகழிகள் பொதுவாக பலர் கூடுமிடங்களுக்கு அருகிலேயே வெட்டப்பட வேண்டும். உதாரணமாக பாடசாலைகள், சந்தைகள், தியேட்டர்கள் போன்றவற்றினுள்ளோ, அல்லது அருகிலோ இவை அமைக்கப்பட வேண்டும். இவை தவிர பிரதான சாலைகளில் கூடியளவு சனப் புழக்கம் உடைய சந்திகள் போன்ற இடங்களிலும் கூட இவற்றை வெட்டி வைக்கலாம்.

ஒற்றை அகழி ஒன்றானது 8 அடி நீளமும், இரண்டரை அடி அகலமும், [illegible] சம் 4 அடி வரை ஆழமும் கொண்டதாக இருக்க வேண்டும். இங்கு ஒரு நபருக்கு 4 சதுர அடி நிலப்பரப்பு தேவை என்பதால் மேற் கூறப்பட்ட அகழியினுள் ஐவர் மாத்திரமே பதுங்கி இருக்கக் கூடியதாக இருக்கும்

### தொடர் அகழிகள்

மேலும் அதிகமானவர்களுக்காக திறந்த அகழிகள் வெட்டப்படும் போது ஒற்றை அகழி ஒன்றினை அப்படியே நீளத்தை அதிகரித்து பாவித்தல் புத்திசாலித்தனமல்ல. பதிலாக, முன்னர் அமைத்த அகழியுடன் தொடர்பான [illegible] ஆனால் அதனுடன் 80 பாகைக்கும், 100 பாகைக்கும் இடைப்பட்ட கோணமொன்றை (அண்ணளவாக செங்குத்தாக) அமைக்கக் கூடியவாறு வேறொரு ஒற்றை அகழி ஒன்று 8 அடி நீளத்துக்கு வெட்டப்படலாம். இவ்வாறே மேலும் அதிகமானவர்களுக்காக, அலை வடிவத்தில் தொடர்ச்சியாக அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் போது முழு நீளம் 30 அடிக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

அந்த இடத்தில் மேலும் அமைக்க வேண்டிய தேவை ஏற்படுமாயின், முன்னர் அமைக்கப்பட்ட அலை வடிவ அகழி அமைப்பில் இருந்து 45 அடிக்குக் குறையாத தொலைவிலேயே அடுத்த அகழி வரிசை அமைக்கப்பட வேண்டும். இவ்வகை திறந்த அகழிகளானவை கட்டடங்கள் யாவற்றுக்காவது அருகில் அமைக்க வேண்டி இருப்பின், கட்டடத்தின் உயரத்தின் அரைப் பங்கு தூரத்திலும் கூடியளவு தொலைவில் [illegible] டும். குண்டு வீச்சின்போது [illegible] அதன் உடை பகுதிகள் அகழியினுள் சிதறாது தடுப்பதற்காகவே மேற் கூறியவாறு அமைக்கப்பட வேண்டியுள்ளது.

### பயிற்சி பெறுங்கள்

பொது இடமொன்றில் இவ்வகையான அகழிகள் அமைக்கப்பட்டிருப்பின், அவ்விடத்திற்கு வந்து போகின்ற அனைவருக்கும் அது அமைந்திருக்கும் இடமும், அதனை அடையும் பாதையும் நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு சமிக்ஞை ஒலி கேட்டவுடனேயே அவ்விடத்திலுள்ளவர்கள் உடனடியாக ஓடிச் சென்று அகழிகளினுள் குதித்து, பதுங்குதலை இடையிடையே பயிற்சியாக செய்து வைத்திருத்தல் சிறந்ததாகும்.

முக்கியமாக பாடசாலைகளில் இவை அவசியம் பயிற்றப்படுதல் வேண்டும். இதற்காக மக்கள் தங்களுக்குள்ளேயே சிறு அமைப்பொன்றை ஏற்படுத்தி ஒழுங்கான முறையில் செயற்படுதல் விரும்பத்தக்கதாகும். அகழிகளினுள் ஓடிச் சென்று குதிக்கும் போதும், அனைவரும் ஒரு சேர ஓரிடத்தை நோக்கி ஓடிச் சென்று குதிக்காமல் பரந்து சென்று இயலுமானவரை ஐதாக முழு அகழிகளினுள்ளும் மறைப்புத் தேடுதல் கூடியளவு பாதுகாப்பைத் தருவதோடு விரைவாக செயற்படக் கூடியதாகவும் இருக்கும்.

[தொடரும்]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இன்றைய № 1 நீலசோப்
தேசிக்காய் வாசனையுடன்
எம்டீ நீல சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி.

# உதயன்

09 - 7 - 1990 திங்கட்கிழமை

EMDEE BAR SOAP
எம்டீ பார் சோப்
எம்டீ என்ரபிறைஸஸ், அச்சுவேலி.

# பெற்றோல் - டீசலை அனைவரும் விற்பதற்கு அனுமதிக்க வேண்டும்

## மினிபஸ் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 9

''பெற்றோல், டீசல் என்பனவற்றை அனைவரும் விற்க அனுமதிக்க வேண்டும்.

வடபிராந்திய மினி பஸ் போக்குவரத்துச் சங்கம் இப்படிக் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று யாழ்.நகர சபையில் சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு சங்கத்தின் தலைவர் பொன். மதிமுகராசா தலைமை வகித்தார். மினி பஸ் உரிமையாளர்கள், மினி பஸ் ஊழியர்கள் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எரிபொருள் விற்பனையில் பல தில்லுமுல்லுகள் நடைபெற்றதை அடுத்து விடுதலைப் புலிகளினால் தனியார் எரிபொருள் விற்பனை மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

ஆனால் தற்பொது எரிபொருள் பலரிடம் கையிருப்பில் உள்ள போதிலும் கட்டுப்பாட்டை அடுத்து பலரும் விற்பனைக்கு அஞ்சுகிறார்கள். மேலும் பலர் எரிபொருளை தெற்கிலிருந்து எடுத்து வந்து விற்பனை செய்யவும் தயாராயுள்ளனர்.

இந்நிலையில் அனைவரையும் எரிபொருளை விற்க அனுமதிக்கும் பட்சத்தில் எரிபொருள் விலை ஓரளவு குறைவதுடன், தட்டுப்பாடும் நீங்கும்.

இப்படிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ சகல பகுதிகளுக்கும் மினி பஸ்கள் சேவையிலீடுபடுத்தப்பட வேண்டும்.

★ சகல மினி பஸ்களும் சேவையிலீடுபடக்கூடிய விதத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவையாற்ற வேண்டும்.

★ அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்து வருவோரின் கஷ்ட நிலையை உணர்ந்து இயலுமான வரை இலவசமாகவோ அல்லது குறைந்த கட்டணத்திலோ பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும். (இ-3-9)

## திருடருக்கு தண்டனை

''நான் தான் எவர்சில்வர் பொருள்களைக் களவெடுத்தேன்.''

இவ்வாறு கூற வைக்கப்பட்ட இருவர் நேற்றுக் காலை குருநகர் வீதிகளில் அழைத்துச் செல்லப்பட்டனர்.

குருநகர் புதிய கடற்கரைவீதியில் தர்மன் என்பவரதுவீட்டில் திருட்டில் ஈடுபட்டிருந்த மேற்படி இருவரையும்பொது மக்கள் கையும் மெய்யுமாகப் பிடித்து தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

வீதி ஊர்வலத்தை அடுத்து இருவரும் யாழ்-கோட்டைப் பகுதியில் பணிசெய்ய அனுப்பி வைக்கப்பட்டனர். என்று கூறப்படுகிறது. [இ-51]

# யுத்த காலத்தில் சகலருக்கும் தற்காப்புப் பயிற்சி அவசியம்

## மாணவர்களுக்கு அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 9

யுத்தம் எங்கு நடைபெற்றாலும் மக்களுக்கும், மாணவர்களுக்கும் தற்காப்புப் பயிற்சி அவசியம். எல்லோருக்கும் தற்காப்பு முறைகள் தெரிந்திருக்கவேண்டும்.

மாணவர்களாகிய நீங்கள் தற்காப்புப் பயிற்சி முடிந்ததும் உங்கள் வழமையான அலுவல்களைக் கவனிக்கலாம்.

இவ்வவாறு''விடுதலைப்புலிகள்'' பத்திரிகையின் ஆசிரியர் திரு. ரவி தெரிவித்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் நேற்றுக் காலை நடைபெற்ற மாணவர்களுக்கான கூட்டத்தில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் தற்காப்பு நடவடிக்கைகள் குறித்து அவர்களுக்கு விளக்கப்பட்டது

திரு' ரவி அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது;-

ஸ்ரீலங்கா அரசு 60 ஆயிரம் படையினரைத் திரட்டி தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தத் தயாராகிறது,

அமெரிக்கா,ரஷ்யா மற்றும் பல நாடுகளில் இளைஞர், யுவதிகளுக்கு தற்காப்புப் பயிற்சி வழங்கப்படுகிறது.

அதேபோல்எமது மக்களும் தற்காப்பு பயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

எப்படியான யுத்தம் வந்தாலும் தமிழீழம் ஒன்றை வென்றெடுப்பதுதான் எமது இலட்சியம். இதன் ஒரு அங்கமாகவே ஒவ்வொரு மக்களுக்கும், மாணவர்களுக்கும் தற்காப்பு பயிற்சி வழங்கவுள்ளோம்.

15 தினங்களுக்கு மட்டுமே நாளாந்தம் 3 மணித்தியாலங்கள் தற்காப்பு பயிற்சி வழங்கப்படும். இந்தப் பயிற்சி மூலம் நீங்கள் உங்கள் மக்களை, உங்களை, கிராமங்களைப் பாதுகாத்து கொள்ளலாம். -- என்று சொன்னார்.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட மாணவ அமைப்பு பொறுப்பாளர் செல்வி பாரதியும் கலந்து கொண்டார். [அ-10]

# அகதி முகாம் பராமரிப்பு கிராம சேவையாளரிடம்

யாழ்-மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களை பராமரிக்கும் பொறுப்பை கிராம சேவையாளர் தலைமையிலான குழுவிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழுவில் உள்ளூர் பிரமுகர்கள் இடம் பெறுவர்.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தில் சனிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அகதி முகாம்களில் நிலவும் குறைபாடுகள் குறித்த ஆராயும் நோக்குடன் இந்தக் கூட்டம் கூட்டப்பட்டது.

முகாம்களுக்கு அரசு சார்பற்ற அமைப்புக்களாலும், பொது மக்களாலும் வழங்கப்படும் உதவிகளை நல்ல முறையில் அகதிகளுக்கு வழங்க இந்தக் குழு பொறுப்பாக இருக்கும். (இ-3-9)

## போர்க்கால விசேஷ கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

யாழ். பல்கலைக்கழக அனைத்து மாணவர்களுக்குமான போர்க்கால விசேஷ கூட்டம் நாளை செவ்வாய்க் கிழமை காலை 10மணிக்கு கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற இருக்கிறது, (இ-3)

# கிராமிய உற்பத்திக் குழு உறுப்பினருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூலை9

சுயஉணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய கிராமமட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர்களுக்கு சனி, ஞாயிறு கிழமைகளில் விவசாயப் பயிற்சி அளிக்கப்படஇருக்கிறது.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் அமைக்கப்பட இருக்கும் இந்தக் கிராமிய உற்பத்திக்குழுவின் செயற்பாடுகள் குறித்து பல்வேறு மட்டத்தில் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

எமது பிரதேசத்தின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யும்வகையில் முதலில் கிராமிய உற்பத்திக் குழுக்கள் அமைக்கப்பட இருக்கின்றன. கிராம அபிவிருத்தி, சனசமூக நிலையப் பிரதிநிதிகளையும், விவசாயம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அனுபவம் உள்ளவர்களையும் கொண்டதாக இந்தக்குழு அமைக்கப்படும்.

அடுத்ததாக கமநலசேவை நிலைய மட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்படும். பெரும்பாக உத்தியோகத்தர், விவசாயப் போதனாசிரியர், விவசாயக் குழுத்தலைவர், கிராமிய உற்பத்திக்குழு உறுப்பினர், பொறியியல், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் பெறுவர். (இ-3)

# இலங்கைத் தமிழர்களுக்கான அவகாசம் 15 வரை நீடிப்பு

சென்னை, ஜூலை 9

1983 ஆம் ஆண்டில் இருந்து தமிழ்நாட்டில் உரிய ஆவணங்கள் இன்றி தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள் அனைவரும் தங்கள் விவரங்களை அருகில் உள்ளபொலீஸ் நிலையங்களில் பதிவு செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தை தமிழக அரசு இம்மாதம் 15ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

இது சம்பந்தமான உத்தியோகபூர்வ அறிவிப்பு கடந்த சனிக்கிழமை சென்னையில் வெளியிடப்பட்டது.

சம்பந்தப்பட்ட இலங்கைத் தமிழர்கள் அனைவரும் ஏழு தினங்களுக்குள் தங்கள் விவரங்களை பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்ய வேண்டும் என்றும்-

இலங்கைத் தமிழருக்கு வீடுகளை வாடகைக்கு வழங்கிய உரிமையாளர்களும் அதுபற்றிய விவரங்களையும் பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்ய வேண்டும் என்றும் தமிழக அரசு கடந்த மாதம் ஆறாம் திகதி உத்தரவு பிறப்பித்தது

அதற்கிணங்க 6 ஆயிரத்து 500க்கு மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் தங்கள் பெயர்களை பொலீஸ் நிலையங்களில் பதிவு செய்தனர்.

இந்தக் கால அவகாசம் போதாது என்று முறையிடப்பட்டதைத் தொடர்ந்து, தமிழக அரசு இம்மாதம் 15ம் திகதிவரை கால நீடிப்பு வழங்கியுள்ளது.

இதன் பின்னர் தங்கள் விவரங்களை தெரியப்படுத்தாத இலங்கைத் தமிழர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. (இ-எ)

## 157 பேர் தடுத்துவைப்பு

கொழும்பு, ஜூலை 9

பேசாலையில் இருந்து தமிழகத்திற்கு நான்கு வள்ளங்களில் புறப்பட்டவிருந்த 157 பேரை இலங்கைக் கடற்படையினர் தடுத்து வைத்துள்ளனர். என்று தெரிவிக்கப்படுகிறது.

அகதிகள் என்றபோர்வையில் தீவிரவாதிகள் இந்தியாவுக்குத் தப்பிச்செல்லலாம் என்பதற்காகவே கடற்படையினர் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாக அரசுச் செய்தி ஒன்று கூறுகிறது. (இ-எ)

# யாழ். குடாநாட்டின் மீது மும்முனைத் தாக்குதல்?

கொழும்பு, ஜூலை 9

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது மும்முனைத் தாக்குதல் நடத்துவதற்கு ஆயுதப்படையினர் ஆயத்தமாகி வருகின்றனர்.

இப்படி யாழ்ப்பாணத்தில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்திருப்பதாகக் கொழும்பு பத்திரிகை ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

கடல், தரை, ஆகாய மார்க்கங்களில் இத்தாக்குதல் நடத்தப்படும் என்றும் –

யாழ். குடாநாட்டை விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து மீட்பதற்காகவே புதிய இத் தந்திரோபாயம் மேற்கொள்ளப்படுவதாகவும் இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

## குருநகரில் நகை திருட்டு

குருநகர், ஜூலை 9

குருநகர் றெக்கிளமேசன் சென்றலீஸ்ற் வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து சுமார் இரண்டரை லட்சம் ருபா பெறுமதியான நகைகள் மற்றும் கெசற் றெக்கோடர் திருடப்பட்டுள்ளன.

வீட்டில் உள்ளோர் இடம் பெயர்ந்திருந்த சமயம் கடந்த சனிக்கிழமை திருட்டு இடம் பெற்றது. (இ-51)

## அகதி முகாம்கள் பற்றிய கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை9

வடபகுதியில் அமைந்துள்ள அகதிமுகாம்களில் உள்ள குறைபாடுகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் ஆகியன குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று தமிழீழ ஆய்வு நிலையத்தில் எதிர் வரும் புதன் கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும்.

அகதிமுகாம்களை நிர்வகிக்கும் சகல அரசு சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (இ-3-9)

## கிழக்கின் பல பகுதிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

புலிகள் சைக்கிள்களில் சாதாரணமாகத் திரிகின்றனர்.

சந்திவெளி, ஒட்டமாவடி ஆகிய இடங்களில் நவீன ஆயுதம் தரித்த புலிகள் உலாவிக்கொண்டிருந்தனர்.

மக்கள் விடுதலைப் புலிகளுடன் சுதந்திரமாகக் கதைத்துக்கொண்டு நிற்பதையும் காணமுடிகிறது.

### ஈழத்திற்கான இறுதிப் போர்

''கடைசித் தமிழன் ஒருவன் இலங்கையில் இருக்கும் வரை தமிழ் ஈழத்தை அடைவதற்கான போர் தொடரும்''-என்று புலிகள் இயக்கப் போராளி ஒருவர் சொன்னார்.

''இப்போது நாம் மேற்கொண்டிருக்கும் போர் ஈழத்தை அடைவதற்கான இறுதிப் போர். ஈழம் கிடைக்காமல் போர் ஓயாது'' -என்று மட்டக்களப்புப் புலித் தளபதி சுதர்சன் கூறினார்:

### மக்களே புலிகள்

மக்கள் ஆதரவு எப்போதும் தம்பக்கமே என்று புலிகள் இயக்கப் போராளிகள் கூறினர்.

இதை உறுதி செய்வதுபோல் ஏறாவூரைச் சேர்ந்த 30 வயதான ஒருவர் கூறினார்:-

''மக்கள் எப்போதும் புலிகளுக்கு ஆதரவாக இருக்கின்றார்களா? என்று பலரும் கேட்கின்றார்கள். மக்கள் எப்போதுமே புலிகள் தான். ஆனால் புலிகள் போராளிகள் மட்டும் ஆயுதம் வைத்திருக்கின்றார்கள். அவ்வளவுதான்' -என்றார்.

இப்படி அந்தச் செய்தியாளர் தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்து உள்ளார்.

## மார்ட்டினோ நவரத்திலோவா

# விம்பிள்டன் டென்னிஸில் 9 ஆவது தடவை சாம்பியன்

லண்டன், ஜூலை 9

பெண்களுக்கான விம்பிள்டன் டென்னிஸ் (தனி) போட்டியில் ஒன்பதாவது தடவையாக மாட்டினோ நவரத்திலோவா சாம்பியன் ஆகி சரித்திரம் படைத்தார்.

இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை நடந்தது.

அமெரிக்க வீராங்கனை சேனா கரிஸன் என்பவரை நவரத்திலோவா 6-4, 6-1 புள்ளிகளால் தோற்கடித்தார் ஆட்டம் 75 நிமிடங்கள் நீடித்தது.

விம்பிள்டன் டென்னிஸ் பெண்களுக்கான (தனி) போட்டியில் அடுத்தடுத்து ஒன்பது தடவைகள் ஒருவர் சாம்பியனாக வந்தது இதுவே முதல் தடவை ஆகும்.

மார்ட்டினோ நவரத்திலோவா அமெரிக்க சாம்பியனாக 4 முறையும் பிரெஞ்சு சாம்பியனாக 2 முறையும் ஆஸ்திரேலிய சாம்பியனாக மூன்று முறையும் வெற்றி பெற்றார் என்பது நினைவு கூரத்தக்கது. (எ)

## முகமாலையில் ஹெலி சூடு

பச்சிலைப்பள்ளி ஜூலை9

முகமாலை தேவாலயத்தை நோக்கி ஹெலியிலிருந்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் கடந்தவெள்ளி இரவு பதினொரு மணி அளவில் இடம் பெற்றது.

இதனை அடுத்து தேவாலயத்தில் இருந்த அகதிகளும் முகமாலை மக்களும் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்ந்திருந்தனர். (இ-117)

# பொது மக்கள் மீதான தாக்கு; மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 9

பொதுமக்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை விடுத்துள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு;

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையை ஆழ்ந்த கவலையோடும், அச்சத்தோடும் நோக்குகிறோம்.

தமிழ் பகுதிகளில் போர் விமானங்களாலும், ஹெலிக்கொப்ரர்களாலும் நடத்தப்படும் தொடர் குண்டு வீச்சுக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அதிகரிக்கும் பதற்றமும், வன்முறையும் நிலைமையை மேலும் சீர்குலைக்கின்றன.

அப்பாவிப்பொதுமக்கள் மீது திட்டமிடப்பட்ட முறையில் திணிக்கப்பட்டிருக்கும் இரக்கமற்ற செயல்கள் இன ஒழிப்பு முறையாக அமைவதோடு இத்தகைய செயல்களை எவ்வகையிலும் எவராலும் நியாயப்படுத்த முடியாது.

பலாத்காரம் கட்டவிழ்த்து விடப்பட்ட இதே வேளையில் தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடையும் போடப்பட்டுள்ளது. இதனால் அப்பாவி பொதுமக்களின் பட்டினிச்சாவை எதிர்நோக்க வேண்டிய அவல நிலையை உருவாக்கியுள்ளது.

இத்தகைய சூழ்நிலை பொதுமக்களின் அவஸ்தையை அதிகரிக்குமேயன்றி பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.

இந்த உண்மையை அரசாங்கம் உணர்ந்து கண்மூடித்தனமான தாக்குதல்களை நிறுத்தி எல்லாப் பிரச்சினைகளுக்கும் நியாய பூர்வமான முறையில் தீர்வுகாணவேண்டும்.

இந்நிலையில் சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவது தமிழ் பேசும் மக்கள் மீது கரிசனையுள்ள எல்லோருடைய தலையாய கடமை ஆகும். [illegible] விக்கப்பட்டுள்ளது. (இ)

## 46 பேர் விடுதலை

கொழும்பு, ஜூலை 09

மட்டக்களப்புச் சிறைச்சாலை இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் விசாரணையின் பின்னர் 46 பேர் கடந்த புதன்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

விடுதலையானவர்கள் முகாமில் வைத்து உறவினர்களால் பொறுப்பேற்கப்பட்டனர்.

## பேராதனை பல்கலைக்கழக மாணவருக்கு

பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சகல பீட மாணவர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு [illegible] விடுக்கப்பட்டுள்ளது. (ஒ)

## கோட்டைக்குள்:..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மைதானம் ஒன்றில் தரையிறங்க வேண்டும்: விடுதலைப் புலிகள் ஹெலிக்கொப்டரை பார்வையிட்ட பின்னர், செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் அதில் ஏறிச் செல்ல அனுமதிப்பர். பின்னர் அந்தக் ஹெலிக்கொப்டர் பொது மைதானத்தில் இருந்து புறப்பட்டு, கோட்டைக்குள் தரையிறங்க விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பர்.

கோட்டைக்குள் வைத்து காயமுற்ற சிப்பாய்கள் அந்த ஹெலிக்கொப்டரில் ஏற்றப்பட்டபின்னர் மீண்டும் அந்த ஹெலிக்கொப்டர் பொது மைதானத்தில் இறக்கப்படும். அங்கு செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் இறங்க - ஹெலிக்கொப்டர் காயமுற்ற சிப்பாய்களுடன் புறப்பட்டுச் செல்லும் - இதுவே தற்போது பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் புதிய வழிமுறையாகும்.

இந்த ஏற்பாட்டுக்கு விடுதலைப்புலிகள் இணக்கம்தெரிவித்தார்களா என்பதைஅறிய முடியவில்லை. (உ-9)

## இடமாற்றம்

### நியூ விமாகி செரமிக்ஸ்

எமது ஸ்தாபனம் தற்காலிகமாக மானிப்பாய் இலங்கை வங்கி கிளைக்கு முன்பாக மாற்றப்பட்டுள்ளது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

★ செரமிக் உற்பத்திப் பொருள்கள்
★ நிலத்திற்கும், சுவருக்கும் பதிக்கும் மாபிள் கற்கள்
★ பி (F) ளைவூட் கதவுகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

[சி-4791]

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் தேவபாலசுந்தரம்

முன்னை நாள் யாழ். மாநகர சபை உறுப்பினரும், ஓய்வுபெற்ற விளையாட்டு அலுவலருமான திரு. நாகலிங்கம் தேவபாலசுந்தரம் 08-07-1990 அன்று காலமானார். இவர் இராஜமணி (அதிபர், கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்) யின் அன்புக் கணவரும், தேவநேசன் (மாணவன், பரியோவான் கல்லூரி) உடைய அன்புத் தந்தையும், யோகம், தேவபால சிங்கம் (இளைப்பாறிய விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கல்லூரி), காலஞ்சென்ற மனோன்மணி, பூபால சிங்கம் (காப்புறுதி முகாமையாளர், ஜோன் கீல்ஸ், கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-07-1990 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கைதடி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத் தருகிறோம்.

தகவல்:
திருமதி தேவபாலசுந்தரம்

கைதடிச் சந்தி,
கைதடி.

[13654]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org